# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 21 வியாழக்கிழமை (05.07.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 198







## கடத்தல் தொடர்பாக 16 பேர் கைது

(கொழும்பு)

ஆட்கடத்தல் மற்றும் படுகொலைகளானது அனைத்துலகத்தின் கடும் விமர்சனங்களுக்குள்ளாக்கியிருக்கும் நிலையில் இச்சம்பவங்கள் தொடர்பில் 16 பேரைக் கைது செய்துவிட்டதாக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல அறிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் நேற்று புதன்கிழமை அவர் கூறியதாவது,

வான்படையின் முன்னாள் அதிகாரி, 4 பொலிஸ் அதிகாரிகள், 4 முஸ்லிம்கள் உள்ளிட்ட 16 பேர் இது தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர். தற்போது வான்படையில் பணியாற்றிய (06 ஆம் பக்கம் பார்க்க)

## குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மூலம் அச்சுறுத்துகின்றது அரசாங்கம்–ஜே.வி.பி.

(கொழும்பு)

அரசாங்கத்தை விமர்சிப்பதைத் தடுக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தை மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பயன்படுத்துகின்றது என்று ஜே.வி.பி. சாடியுள்ளது.

நாடாளுமன்றத்தில் ஜே.வி.பியின் தலைவர் விமல் வீரவன்ச உரையாற்றுகையில், எமது கட்சியைச் சேர்ந்த இராமலிங்கம் சந்திரசேகரனை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் (06 ஆம் பக்கம் பார்க்க)

## பௌயர் வரார் நோர்வே அறிவிப்பு

(கொழும்பு)

நோர்வேயின் சிறப்புச் சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்ஸன் பௌயர் இலங்கைக்கு வருவதாக வெளியான செய்திகள் அனைத்துமே ஊகமானவை - அப்படியான திட்டம் ஏதும் இல்லை என்று நோர்வே அறிவித்துள்ளது.

இலங்கைக்கான நோர்வேத் தூதரகப் பேச்சாளர் எரிக் நுரென்பெர்க் இது தொடர்பில் கூறியதாவது, (06 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேசும் எண்ணம் அரசாங்கத்துக்கு கிடையாது

## அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் எண்ணம் அரசாங்கத்துக்குக் கிடையாது என பாதுகாப்பு விவ காரங்களுக்கான அமைச்சரவைப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (06 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அமெரிக்கா தலைமை தாங்க வேண்டும்

### சட்ட வல்லுநர்கள் புஷ்ஷுக்குக் கடிதம்

(வாஷிங்டன்)

இலங்கையில் நடைபெற்று வரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அமெரிக்கா தலையிட வேண்டுமென அந்நாட்டைச் சேர்ந்த 50 பேர் கொண்ட சட்ட வல்லுநர்கள் குழுவொன்று ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷுக்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை எட்டுவதற்கு புதிதாக ஆரம்பித்திருக்கும் சர்வதேச முயற்சிகளுக்கு தலைமைத்துவத்தைப் பெறும் சந்தர்ப்பம் அமெரிக்காவுக்குள்ளது என அக் கடிதத்தில் சட்டவல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சட்டவல்லுநர் (06 ஆம் பக்கம் பார்க்க)



## விடுதலைப்புலிகளின் வான்படைப் பலத்தின் விரிவு காலத்தை எதிர்பார்த்திருக்கின்றோம்

### புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன்

கிழக்கில் சாதிப்பதாக அரசாங்கம் சொல்லும் விடயம் எவ்வளவு காலந்தான் நீடிக்கும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன வானொலிக்கு (ATBC) நேற்று முன்தினம் ஒலிபரப்பாகிய 'செய்தி அலைகள்' நிகழ்ச்சிக்கு அவர் அளித்த நேர்காணலில் கூறியுள்ளதாவது,

அரசாங்கத்தின் தமிழினத்தை அழித்தொழித்தல் எனும் தொடர்ச்சியான நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் வன்னிப்பெருநிலப் பரப்பின் மீது பெருமளவிலான யுத்தத்தை முன்னெடுக்க முனைகின்றது என்பதற்கு அப்பால் நாங்கள் ஒரு அரசாங்கத்தை நடத்தும் வடக்குப் பிரதேசத்தில் இராணுவ ரீதியான ஒரு வெற்றியைக் காட்டி தங்களுடைய அரசியல் பலத்தைத் தக்க வைக்க வேண்டிய தேவை ஒன்று மகிந்த அரசாங்கத்திற்கு இருக்கின்றது. அந்த வகையில்தான் இத்தகைய ஒரு நடவடிக்கையை மகிந்த அரசாங்கம் மேற்கொள்ள முனைகின்றது. (02 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கரும்புலிகள் தினம் குடாநாட்டில் கடும் சோதனை

(யாழ்ப்பாணம்)

இன்று கரும்புலிகள் தினம். இதையொட்டி யாழ்.குடாநாடு முழுவதும் கடந்த சில தினங்களாக படையினர் குவிக்கப்பட்டு வீதிச் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை 1987 ஜூலை 5 முதல் 2007 ஜூன் 27 வரை 322 கரும்புலிகள் வீரச்சாவடைந்துள்ளதாகவும் இவர்களில் 81 பேர் தரைக் கரும்புலிகள். 241 பேர் கடற் கரும்புலிகள் என்றும் விடுதலைப்புலிகளின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (ந)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எரிக்சொல்ஹெய்முடன் சந்திப்பு

(ஒஸ்லோ)

ஐரோப்பிய சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்மைச் சந்தித்துப் பேசியுள் ளனர்.

இதன்போது அரசாங்கம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை உரிய முறையில் கடைப்பிடிப்பதன் மூலமே இலங்கையில் தற்போது தோன்றியுள்ள பதற்றநிலையை முடிவுக்குக் கொண்டு வரலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எரிக்சொல்ஹெய்மிடம் வலியுறுத்தியுள்ளனர்.

அரசாங்கம் (06 ஆம் பக்கம் பார்க்க)

## போர் ஆயுதங்களைத் தருமாறு இலங்கை மீண்டும் வலியுறுத்தல்

### நாராயணனிடம் றோகித நேரில் கேட்டார்

(கொழும்பு)

அரசாங்கத்தின் யுத்த நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆயுத தளபாடங்களை வழங்குமாறு இந்தியாவிடம் இலங்கை அரசு மீண்டும் கோரியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம, இந்தியப் பாதுகாப்புஆலோசகர் கே. ஆர்.நாரா (06 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை அரசியல் ரீதியாக வெல்ல முடியாது

# இனப்பிரச்சினையின் தோற்றத்திற்கு புலிகளின் தலைவர் காரணமல்ல

### அமைச்சர் டியூ குணசேகர கருத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடித்தாலும் கூட அரசியல் ரீதியாகத் தோற்கடித்து விட முடியாது என்று அரசியல் யாப்பு விவகாரங்களுக்கான அமைச்சரும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளருமான டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 64 ஆவது ஆண்டையொட்டிய நிகழ்வு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அந்நிகழ்வில் டியூ.குணசேகர பேசியதாவது,

ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள் நாட்டினது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். பண்டாரநாயக்க காலத்தில் தொடங்கிய இனப்பிரச்சினையானது ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆட்சிக் காலத்தில் இரத்தம் தோய்ந்ததாக மாறியது. 25 ஆண்டுகளாக இருதரப்பும் போரிட்டு வந்தாலும் பிரச்சினைக்குத் (06 ஆம் பக்கம் பார்க்க)

# செ.ச.தொண்டர் இருவர் கொலை சந்தேக நபர் இனம் காணப்பட்டனர்

## அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல

(கொழும்பு)

கடத்திக் கொலை செய்யப்பட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர்கள் இருவரின் மரணம் தொடர்பில் இருவர் சந்தேக நபர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஆனால் இவர்கள் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியில் தற்போது இல்லை என்றும் பாதுகாப்பு பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பாதுகாப்பு நிலை தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு பேசும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

கே.சந்திரமோகன் மற்றும் எஸ்.சண்முகலிங்கம் ஆகிய செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள் கடந்த மாதம் முதலாம் திகதி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் வைத்து இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த இருவரும் கொழும்பில் இடம்பெற்ற பயிற்சிப் பட்டறையொன்றில் கலந்து கொண்டு விட்டு வீடு திரும்ப ஆயத்தமான வேளையிலேயே இந்த கடத்தல் சம்பவம் இடம்பெற்றது.

பின்னர் இவர்கள் இருவரின் சடலங்களும் இரத்தினபுரி,கிரியெல்ல என்னும் இடத்தில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் கண்டெடுக்கப்பட்டன.

இந்தக் கொலை தொடர்பாக பூரண விசாரணை நடத்தி முழுமையான அறிக்கையொன்றைக் கையளிக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆணையிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)

# தமிழ்பேசும் மக்களின் உரிமைக்காக ஈ.பி.டி.பி. தொடர்ந்தும் வலியுறுத்தும்

(கொழும்பு)

அரசியல் தீர்வில் விருப்பங்கொண்டிருக்கும் எமது மக்களின் அபிலாஷைகளை யாரும் நிராகரித்துவிட முடியாது.எமது மக்களின் அரசியலுரிமை சுதந்திரத்திற்கான தீர்வினை விரைவுபடுத்தவேண்டும் என நாம் தொடர்ந்தும் அரச தரப்பிடம் வலியுறுத்தி வருகின்றோம்.

அரசியலுரிமை சுதந்திரத்தை வென்றெடுப்பதற்கான எமது பாதையைப் பலப்படுத்தவும் உறுதுணையாக இருக்கவும் அனைத்து மக்களும் தொடர்ந்தும் நம்பிக்கையுடன் அணிதிரள வேண்டும் என ஈ.பி.டி.பி.வேண்டுகோள் விடுக்கின்றது. இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைதித் தீர்விற்கு வழியின்றி, முடிபற்று தொடரும் யுத்தம் எமது மக்களை நடுத்தெருவில் நிறுத்தியிருக்கின்றது. மனிதப்படுகொலைகள், மரண அச்சுறுத்தல்கள், ஆட்கடத்தல், கப்பம், கட்டாய வரி என தொடரும் மனித உரிமைமீறல்களையே இதுவரை கால யுத்தம் எமது மக்களுக்கு மிச்சமாக விட்டிருக்கின்றது.சொந்த வாழ்விடங்களைத் துறந்த இடம் பெயர்வுகள் சொல்லொணாத் துயரங்களைத் தந்து கொண்டிருக்கின்றன. நாளை என்ன நடக்குமோ என்ற அச்சங்களையும் நம்பிக்கையீனங்களையும் உருவாக்கியிருக்கின்றன.

வெல்லப்பட முடியாத யுத்தத்தில் கொல்லப்பட்ட மனித உயிர்களின் தொகை இன்னமும் அதிகரித்துச் செல்வதற்கான அபாயகரமான சூழலே தொடர்கின்றது. இதுவரைகால யுத்தம் அழிவுகளைத்தவிர எந்தவித நன்மைகளையும் தந்து விடவில்லை என்ற உண்மையை ஒட்டுமொத்த மக்களும் இன்று உணர்ந்துள்ளதாகவே நாம் நம்புகின்றோம்.

தமிழ் பேசும் மக்கள் சமாதானத்தை விரும்புகின்றார்கள், சமஉரிமையை விரும்புகிறார்கள், யுத்தமில்லாத ஒரு அமைதி பூமியில் வாழ விரும்புகிறார்கள். அமைதி, சமாதானம் என்பவற்றிற்காக அரசியல் உரிமைகளற்றவர்களாகவோ, இரண்டாந்தர பிரஜைகளாகவோ வாழ்வதற்கு எமது மக்கள் தயாரில்லையெனவும் எண்ணுகிறார்கள்.

யுத்தத்தை நிறுத்தி அமைதிப்பேச்சுவார்த்தையினூடாக அர்த்தமுள்ள ஒரு அரசியல் தீர்வையே தமிழ்பேசும் மக்கள் விரும்பி நிற்கிறார்கள். மனித உரிமையும், மனித கௌரவமும் தமக்குத்தேவை என எதிர்பார்க்கிறார்கள்.நாம் எமது மக்களின் துயரங்களை துடைப்பதற்காக மக்கள் மத்தியில் நின்று நாளும் பொழுதும் உழைப்பவர்கள்.

அந்த வகையில் மக்களின் உணர்வுகளை நாம் சரிவரப்புரிந்து கொண்டு மக்களின் சாட்சியங்களாக சகல தரப்பிடமும் எமது மக்களின் விருப்பங்களை வலியுறுத்தி வருகின்றோம். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களிடமும் தென்னிலங்கை அரசியல் தலைவர்களிடமும் இதையே நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

சர்வகட்சி மாநாட்டில் எமது மக்களின் அவலங்களை வரலாற்று ரீதியாகவும் அதற்குரிய யோசனைகளை அர்த்தமுள்ளதாகவும் நியாயமானதாகவும் நாம் வலியுறுத்தி வருகின்றோம். இதன் அடிப்படையிலேயே நாம் சர்வதேச சமூகத்திடமும் நட்பு நாடாகிய இந்தியாவிடமும் எமது மக்களுக்கான அரசியல் உரிமைச் சுதந்திரம் குறித்து தெளிவாக எடுத்து விளக்கி வருகிறோம்.

அரசியல் தீர்வு என்பது எமது மக்களின் நிம்மதியானதும் சுதந்திரமானதுமான வாழ்விற்காகவே என்றும் அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# பாதுகாப்பு அமைச்சின் உத்தரவில் ஹலோரஸ்ட் பணியாளர் 17 பேர் பதவி நீக்கம்

யாழ்ப்பாணத்தில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள ஹலோரஸ்ட் நிறுவனத்தில் பணிபுரிந்த 17 உத்தியோகஸ்தர்களை பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பேரில் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அரச சார்பற்ற நிறுவனத்தின் நெருங்கிய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இப் பணி நீக்கமூலம் பாதிக்கப்பட்டவர்களின் கருத்துப்படி இவர்கள் சுமார் நான்கு வருடங்களுக்கு மேலாக இவ் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தவர்கள் என்றும் இவர்கள் தமது வேலைக் காலத்தில் எதுவித தவறும் இழைக்கவில்லை எனவும் தெரிய வருகிறது.

எனினும் ஹலோரஸ்ட் நிறுவனத்தினர் இது தொடர்பில் எதுவித கருத்தும் தெரிவிக்கவில்லை.

இதேவேளை பலாலி கட்டளை மையம் புதிய வேலையாட்களை வேலைக்கு அமர்த்தும் போது தமது பாதுகாப்பு அனுமதி பெறப்படவேண்டுமெனவும் தெரிவித்திருந்ததாக அறியமுடிகிறது. (ந-5)

## கனேடியத் தூதரகத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவுக

### அந்நாட்டு எம்.பி.கோரிக்கை

யாழ்ப்பாணத்தில் கனேடிய தூதரகம் ஒன்றை நிறுவவேண்டுமென அந்நாட்டுப் பிரதமருக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கடிதமெழுதியுள்ளார். டன் மக்தகுக் என்ற பாராளுமன்ற உறுப்பினரே இக் கடிதத்தை வரைந்துள்ளார். சிறுபான்மையினரான தமிழர்கள் கொழும்பில் இருந்து இனத்துடைப்புச் செய்யப்படுகின்றனர். அண்மையில் கொழும்பு விடுதிகளில் இருந்து விரட்டப்பட்டவர்களில் பெரும்பாலானோர் வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புத் தேடிச் செல்ல யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தவர்கள் எனவே யாழ்.குடாநாட்டில் கனேடியத் தூதரகம் ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (ந-5)


## மணமகள் தேவை

யாழ்.இந்து வேளாளர் கனடா பிரஜாவுரிமையுடைய 1973 இல் பிறந்த லக்கினத்தில் செவ்வாய்,உத்தரட்டாதி நட்சத்திரம் உள்ள மணமகனுக்கு படித்த, மெல்லிய,அழகான மணமகள் தேவை. முழு விபரத்துடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல: 038, வலம்புரி, இல.03, 2 ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (038)


# புலிகளின் வான்படைப் பலத்தின்...

புலிகளின் தாக்குதல்கள் முறியடிக்க மிக உச்சமான பயிற்சி பெற்ற-பிற படையணிகள் நம்புகிற படையணிகளை முன்னே நிறுத்தி தான் பதில் தாக்குதலை மேற்கொள்ள வேண்டிய நிலைமை அங்குள்ளது. ஏனெனில் அரசின் அனைத்து படையணிகளுமே புலிகளின் தாக்குதலுக்கு முகம் கொடுக்க என்பதல்ல.இராணுவமானது இழப்புக்களின் மத்தியில் மன்னார்-மடுப் பகுதியை நோக்கி முன்னேற முயற்சித்தது. ஆனால் கடந்த ஆனி மாதம் முற்பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் அந்த முன்னேற்ற முயற்சி முற்றாக முறியடிக்கப் பட்டது. அதனால் பின்வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

இந் நிலையில் மற்றொரு போர் அரங்கை அமைக்க முனைகின்றனர் என்பது உண்மைதான். ஆனால் அது மணலாற்றில் அமையுமா? வவுனியாவில் அமையுமா? என்பது பற்றி முடிபெடுத்து விட்டார்கள் என்பது பற்றி தெரியவில்லை.

மணலாற்றைப் பொறுத்தவரை பாரிய சிங்களச் சதியின் பின்னணி உள்ளது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கொடுங்கோல் ஆட்சியில் 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் 11 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் 42 கிராமங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 228 தமிழ்க்குடும்பங்கள் வெளியேற்ற உத்தரவிடப்பட்டது.

அந்த வர்த்தமானி அறிவித்தலின்படி பச்சைத் தமிழ்க்கிராமங்களான செம்மலை, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், தென்னமரவடி உள்ளிட்ட 42 கிராமங்கள் அநுராதபுர மாவட்டத்தின் நிர்வாக ஒழுங்கு முறையில் இணைக்கப்பட்டது.

இதன் முக்கிய நோக்கம் தமிழர் தாயகத்தின் தொடர் நிலப்பரப்பில் வடக்கையும் கிழக்கையும் துண்டாடிவிட்டு நிலையான சிங்களக் குடியேற்றத்தை நிரந்தரமாக அமைக்கும் சதிமுயற்சியாக அது நிகழ்த்தப்பட்டது.

அந்த சிங்கள ஆக்கிரமிப்பு தொடர்ந்து நடத்தப்பட முடியாவிட்டாலும் படை ஆக்கிரமிப்பு இன்னமும் உள்ளது. காடுகள் அதிகமாகவும் [illegible] அரங்கு உள்ளது. [illegible]

[illegible] பது மிகவும் காத்திரமானதாக இருக்கும்.

எந்த ஒரு ஆக்கிரமிப்பாளனும் தனது ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடுகின்ற சக்தியினது அடி ஆழமான மக்கள் ஆதரவு தளத்தை குறிவைத்து முறைகேடான தாக்குதல்களை நடத்துவது வழக்கம்.

அனைத்து இலங்கை அரசாங்கங்களுமே இந்த யுத்தியை பயன்படுத்தி வருகின்றனர். இதில் மகிந்த ராஜபக்ஷ ஒன்றும் விதிவிலக்கல்ல.

## பொது மக்களை இலக்கு வைத்தே வான் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

தற்போது நடாத்தப்பட்டு வரும் வான் தாக்குதல்களில் 90 வீதமானது பொதுமக்களை இலக்குவைத்தே நடாத்தப்படுகிறது. ஆனால் எங்கள் மக்கள் இந்தச் சூழ்நிலைக்கு முகம்கொடுக்கக்கூடியவர்களாக தங்கள் இடங்களில் கட்டுமானங்களை அமைக்கக் கூடியவர்களாகவும் உளவியல் தாக்கத்தை எதிர்கொள்ளக்கூடியவர்களாகவும் இருக்கின்றனர். ஆகையால் இந்த வான்படைத் தாக்குதல்களானது எமது மக்களிடத்தில் இனிமேலும் உளவியல் தாக்கத்தை ஏற்படுத்துமா என்பது சந்தேகமே.

எமது போராட்டம் மக்களுக்கானது. இந்த அச்சுறுத்தல் எழுந்த கால கட்டத்தில் மக்களின் வீடுகளுக்குச் சென்று தற்காப்புத் தொடர்பான துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தோம். எவ்வகையான குண்டுகளை வீசினால் எவ்வகையான தாக்கங்கள் ஏற்படும் என்றும் எத்தகைய கட்டுமானங்களை மேற்கொள்ளவேண்டுமெனவும் விபரித்தோம்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் எங்களது நிர்வாகப் பகுதிகளில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் பதுங்கு அகழிகள் உள்ளன. வானூர்திகள் வானில் பறக்கும் போது எங்கள் குழந்தைகள் பதுங்கு அகழிகளில் இருந்துவிட்டு மீண்டும் வெளியே வந்து படிப்பைத் தொடரும் நிலை உள்ளது.

பொது இடங்கள்,சந்தைகள் மருத்துவமனைகள் ஆகியவற்றிலும் இத்தகைய ஏற்பாடுகளை செய்திருக்கிறோம். சிறுவர்களைப் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் பேசுகிற வெளிநாட்டு அமைப்புக்கள் இந்த விடயங்களில் வாய்மூடிக்கொண்டிருப்பது விநோதமான விடயம்.

எங்கள் தலைவரின் திட்டத்தின் அடிப்படையில் மிகக்கச்சிதமாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழீழ வான்படை தொடக்க நிலையில் உள்ளது. அது தனது அடுத்தடுத்த சிறகுகளில் விரிக்கின்ற காலத்தை நாங்களும் எதிர்பார்த்திருக்கிறோம்.

ஒரு நாடும் இன்னொரு நாடும் நடாத்தும் வான் சமருக்கான கலங்களை அரசாங்கம் கொள்வனவு செய்து வருகிறது. வலுவுள்ள ஒரு வான்படை இங்கு இருப்பதால் அதனை எதிர்த்துப் போரிடவேண்டியுள்ளது என்பதை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

## கிழக்கு கெரில்லாப் போரின் தாய்மடி

கிழக்குப் பகுதி என்பது ஒரு வித்தியாசமான தரையமைப்பைக்கொண்ட தனித்துவமான நிலம். அந்த நிலம் கெரில்லா வகைப் போராளிகளின் தாய்மடியாகும். கடந்த 25 வருடகாலமாக அங்கு எங்களுடைய படைகள் பல நடவடிக்கைகளை கரந்தடிப்படையாக மேற்கொண்டு வருகின்றன.

குடும்பிமலை உள்ளிட்ட கிழக்குப் பகுதியில் இராணுவம் செறிவாக -பரவலாக இருப்பது உண்மைதான். அவர்களுடைய நடமாட்டம் அதிகம் தான்.ஆனால் யார் கட்டுப்பாட்டை இழக்கிறார்கள்-கட்டுப்பாட்டுக்குள் எடுக்கிறார்கள் என்கிற விடயத்திற்குள் இவை சிக்குப்பட்டுவிட முடியாது.

கிழக்கில் யாருடைய செயற்படும் திறமையினைக் கட்டுப்படுத்த முடிகிறதோ அவரது செயற்படும் திறன்தான் உண்மையானதாக இருக்கமுடியும்.கடந்த வாரம் அம்பாறைப் பகுதியில் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் ஊடுருவ முயன்ற அதிரடிப்படையினரை தாக்கிய எம்மவர்கள் படைச்சிப்பாயின் உடலையும் ஆயுதங்களையும் கைப்பற்றியிருக்கின்றனர்.

அரசாங்கத்தின் செய்திகளின் அடிப்படையிலும் கிழக்கில் நாங்கள் மேற்கொள்கின்ற தந்திரோபாய நடவடிக்கைகளை அவ்வப்போது சொல்லாத நிலையிலும் மக்களின் மனதில் ஒருவித அச்சம் ஏற்படுவது வழமைதான். ஆனால் ஒரு விடயம்...

கிழக்கில் இப்போதுள்ள படையணிகளின் எண்ணிக்கையை விட நாம் குறைவாக இருந்த காலத்திலும் எமது செயற்பாடுகள் இருந்தன. இப்போது ஒரு முழு ஒழுங்குபடுத்தல் காலகட்டம் என்கிற அளவில்தான் நாம் தெரிவிக்க இயலும்.

ஆனால் அரசாங்கமும் இராணுவமும் கிழக்கிலே சாதிப்பதாகச் சொல்கிற விடயம் எவ்வளவு காலம் நீடிக்கிறதென்பதை பொறுத்திருந்துதான் பார்ப்போம்.

## கோத்தபாயவுக்கு வரலாறு தெரியாது

இந்திய அமைதிப்படை செய்ய இயலாததை இலங்கை இராணுவம் செய்துள்ளது என்று கூறியிருக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயவுக்கு வரலாறும் தெரியவில்லை-படைத்துறை வரலாறும் தெரியவில்லை.

இந்திய ஆக்கிரமிப்புக் காலத்தில் தொப்பிக்கல என்று சிங்களப் பெயர் மூலம் அழைக்கப்படுகின்ற தூய தமிழ்ப்பகுதியான குடும்பிமலைப்பகுதியில் இந்தியப்படையினர் முகாம் அமைத்திருந்தனர்.

இன்று வரை இலங்கை இராணுவத்தால் அந்த இடத்திற்குச் செல்ல முடியவில்லை. எதை சொல்லவருகிறார் என்பது புரியவில்லை.கண்காணிப்புக்குழு மீண்டும் பணியைத் தொடங் கவுள்ள தாகக்கூறியிருக்கின்றது. அப்படியானால் அவர்கள் இவ்வளவு கால மும் அவர்கள் என்ன செய்து கொண்டிருந் தார்கள்? இதையே தான் நாம் சந்திக்கும் கண்காணிப்புக்குழு நண்பர்களிடமும் கேட்டு வருகிறேன்.

அவர்களது செயற்பரப்பை சுருக்கி, அவமானப்படுத்தி ஒடுக்கி அவர்களை மூலையிலே வைத்திருக்கிறது அரசாங்கம். கண்காணிப்புக்குழுவினர் பத்துப்பேர் கூடுதலாக வந்திருக்கிறார்கள்தான். ஆனால் அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று பார்க்க வேண்டும்.

திருகோணமலை என்பது எமது தொன்மைத் தமிழர் நிலம். திருகோணமலைக்கும் மட்டக்களப்புக்கும் இடையே ஒரு சிங்களச் செருகலை ஏற்படுத்த முயற்சிக்கிறது. குறிப்பாக இன விகிதாசாரத்தை மாற்றியமைக்க சிங்களம் முயற்சிக்கிறது.

மகாவலித்திட்டத்தை அமுல்படுத்தினால் வாகரை வரை சிங்களக்குடியேற்றம் நீளும் அபாயம் உள்ளது. சேனநாயக்க, ஜெயவர்த்தனவைப் போல் சம்பூர்ப் பகுதியை மகிந்த ராஜபக்ஷ சட்டம் மூலம் சிங்களக் குடியேற்றமாக்க முயற்சிக்கிறார் என்றார் இளந்திரையன். (ந-5)

# ஜூலை 83 - ஜூலை 2007

## சிங்கள - பௌத்த பேரினவாத

## செயற்பாடுகளும் எதிர்விளைவுகளும்

அவுஸ்திரேலியாவிலிருந்து
சபேசன்

அன்றைய அரசினால் 1983ஆம் ஆண்டு, ஜூலை மாதத்தில் நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட தமிழின அழிப்பு நடாத்தப்பட்டு, இந்த 2007ஆம் ஆண்டு ஜூலை மாதத்துடன் இருபத்திநான்கு ஆண்டுகள் ஆகின்றன. இந்தத் தமிழின அழிப்பினூடாகத் தமிழீழ மக்களின் பொருளாதாரமும்,இந்தியத் தமிழர்களின் பொருளாதாரமும், மலையகத் தமிழர்களின் பொருளாதாரமும் சேர்த்தே அழிக்கப்பட்டன.

முதன்முறையாக உலக நாடுகளையும் உலுக்கி விட்ட இந்தத் தமிழின அழிப்பானது பௌத்த-சிங்களப் பேரினவாதம் எதிர்பார்க்காத விளைவுகளையும் கொண்டு வந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் அன்றைய ஜனாதிபதியான ஜே.ஆர் .ஜெயவர்த்தனாவிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இன்றைய ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ வரை, சிங்கள -பௌத்த பேரினவாத அரசுகள் மேற்கொண்ட தமிழின அழிப்பு நடவடிக்கைகள், உண்மையில் எதிர் விளைவுகளைத்தான் கொண்டு வந்துள்ளன.

அன்றைய ஜூலை -கறுப்பு ஜூலை 83-தமிழின அழிப்பு, சில அடிப்படையான விடயங்களைக் காரணத்தில் கொண்டு அரசினால் நடத்தப்பட்டதாகும்.

அதில் ஒரு முக்கிய காரணம், தமிழ் மக்களின் பொருளாதாரத் தளத்தைச் சீர்குலைப்பதாகும். அன்றைய தினங்களில் அழிக்கப்பட்ட தமிழ் மக்களின் சொத்துக்களின் மதிப்புக்கள் சுமார் 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று மதிப்பீடு செய்யப்பட்டாலும் உண்மையான இழப்பு இன்னும் பல மடங்காகும் என்றே கருதப்படுகிறது. ஒரு தர்க்கத்திற்காக 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற கணிப்பீட்டை ஏற்றுக்கொண்டாலும் கூட, இருபத்திநான்கு ஆண்டுகளுக்கு முன்பு அது ஒரு மிகப் பாரிய இழப்பு என்பதில் ஐயமில்லை.

அதைத்தவிர இலங்கை, பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற தினத்தில் இருந்து மிக அண்மைக்காலம் வரை மாறி, மாறி வந்த அரசுகள் தமிழினத்தின் மீது மேற்கொண்ட பொருளாதார தாக்குதல்கள் கொஞ்சநஞ்சமல்ல.இச் சிங்களப் பேரினவாத அரசுகள் தமிழீழ மக்கள் மீது தொடர்ந்து மேற்கொண்ட பாரிய இராணுவ நடவடிக்கைகளும், விதித்த பொருளாதாரத் தடைகளும் தமிழீழ மக்களின் வாழ்க்கையை ஓர் இன்னல் மிக்க, துயரம் மிக்க வாழ்க்கையாக மாற்றின.

1983ஆம் ஆண்டு இனக்கலவரங்களுக்குப் பிறகு நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இலங்கைத் தீவில் சுமார் 65,000 பேர்கள் வரை கொல்லப்பட்டுள்ளதாகவும்,சுமார் 800,000 மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும், சுமார் 700,000 மக்கள் புலம்பெயர்ந்துள்ளதாகவும் உலக வங்கியின் அறிக்கை ஒன்று தெரிவித்திருந்தது.

அதுமட்டுமல்லாது தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்காக,சிங்கள அரசுகள் ஆறு பில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவழித்துள்ளதாகவும் பொருளாதார நிபுணர்கள் அன்று மதிப்பிட்டிருந்தார்கள். இந்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில், பாதுகாப்புச் செலவிற்காக மட்டும், 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை அரசு ஒதுக்கியுள்ளது.

இது 139.6 பில்லியன் ரூபாய்களாகும். 1977ஆம் ஆண்டு 0.75 பில்லியன் ரூபாய்களை பாதுகாப்புச் செலவிற்காகப் பயன்படுத்திய அரசு, 1986 ஆம் ஆண்டு ஆறு பில்லியன் ரூபாய்களை பாதுகாப்புச் செலவிற்கு பயன்படுத்தியது. இது படிப்படியாக உயர்ந்து, 2007இல் 139.6 பில்லியன் ரூபாய்களை அரசு தனது பாதுகாப்பு செலவிற்காகப் பயன்படுத்தப் போகிறது. மேலும் பல பில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியுதவிகளாகப் பெற்று, ஆயுதங்களை வாங்குவதற்கு அரசு முயன்று வருகின்றது.

இந்த வேளையில் நாம் ஒரு விடயத்தை கருத்தில் கொள்ள விளைகின்றோம். 2003ஆம் ஆண்டு ஜூன் மாதம், அமெரிக்க அரசின் அன்றைய உதவிச் செயலர் றிச்சட் ஆமிடேஜ் ஒரு விடயத்தை தெரிவித்திருந்தார். அது ஒரு முக்கியமான விடயமாகும்.

'இலங்கைக்கு செய்து வந்த உதவிகள் யாவற்றையும் நிறுத்தி விடுவதற்கு அமெரிக்கா எண்ணியிருந்தவேளையில் தான் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றார்' என்றும் 'அதன் காரணமாக இலங்கைக்கு உதவிகளை நிறுத்துகின்ற தன்னுடைய எண்ணத்தை அமெரிக்கா மாற்றிக்கொண்டது' என்றும் அமெரிக்க அரசின் அன்றைய உதவிச் செயலர் றிச்சட் ஆமிடேஜ் தெரிவித்திருந்தார்.இதற்குரிய அடிப்படைக் காரணம் அன்றைய இலங்கை அரசு சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கும் , யுத்த நிறுத்தத்திற்கும் விருப்பம் தெரிவித்ததேயாகும்.

ஜூலை 83-தமிழின அழிப்பு - தமிழ் மக்கள் மீது திட்டமிட்டுப் பிரயோகிக்கப்பட்டதன் அடிப்படைக் காரணங்களில் ஒன்று தமிழரின் பொருளாதாரத் தளத்தை அழிப்பதாகும்.

ஆனால் தன்வினை தன்னைச்சுடும் என்ற முதுமொழிக்கிணங்க அரசு தன்னைத்தானே பொருளாதார ரீதியில் எடுத்துக்கொண்டது.

இதனை மனத்தில் நிறுத்திக்கொண்டு ஜூலை 83 இனக் கலவரத்தின் இன்னுமொரு முக்கிய காரணியை சற்று விரிவாக தர்க்கிக்க விளைகின்றோம். ஜூலை 83 இனக்கலவரத்தின் மூலம் தமிழ் மக்களின் மன வலிமையை அழித்து அவர்களுக்குக் கடுமையான, கொடுமையான வன்முறையூடாக ஒரு பாடத்தை புகட்டுகின்ற முயற்சியை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசு மேற்கொண்டது.

அதாவது உளவியல் ரீதியாக ''தமிழர்கள் தாங்கள் ஒரு நிர்க்கதியான இனம் , தங்களைக் காப்பாற்றுவதற்கு எவரும் இல்லை, தாங்கள் எந்நேரமும் சிங்களவர்களால் தாக்கப்பட்டு அழிக்கப்படலாம், தாங்கள் எப்போதும் 'சிங்கள -பௌத்த ஆட்சியின் கருணையின் (?)' கீழ் ,



தயவின் கீழ் வாழவேண்டிய இரண்டாம் தரக் குடிமக்கள்'' என்கின்ற ஏக்கமான எண்ணத்தைத் தமிழ் மக்களின் நெஞ்சங்களுக்குள் ஆழமாகப் புதைக்கும் நோக்கோடும், இந்த ஜூலை 83 இனக்கலவரம் நடத்தப்பட்டது.

அன்றைய அமைச்சரான காமினி திஸநாயக்கவின் உரையை நாம் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். 1983ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதியன்று ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரான காமினி திஸநாயக்க பின்வருமாறு கொக்கரித்தார். ஆமாம் தமிழ் மக்களைப் பார்த்து காமினி திஸநாயக்க இவ்வாறு கொக்கரித்தார்.

'உங்களைத் தாக்கியது யார்?- சிங்களவர்கள்! உங்களைக் காப்பாற்றியது யார்?-சிங்களவர்கள்! ஆமாம்! எங்களால் தான் உங்களைத் தாக்கவும், காப்பாற்றவும் முடியும்! உங்களைக் காப்பாற்ற இந்திய இராணுவம் இங்கே வருமாக இருந்தால் அதற்கு 14 மணித்தியாலங்கள் தேவை! ஆனால் 14 நிமிடங்களுக்குள் இந்த நாட்டினில் உள்ள ஒவ்வொரு தமிழனின் இரத்தத்தையும், இந்த நாட்டிற்காக நாம் அர்ப்பணிப்போம்.

உங்களுடைய நெற்றிகளில் நீங்கள் ஒரு யாழ்ப்பாணத் தமிழன் என்றோ, மட்டக்களப்பு தமிழன் என்றோ , மலையகத் தமிழன் என்றோ, இந்துத் தமிழன் என்றோ, கிறிஸ்தவ தமிழன் என்றோ எழுதப்படவில்லை! எல்லோருமே தமிழர்கள் தான்!' இவ்வாறு அமைச்சர் காமினி திஸநாயக்க 1983இல் கொக்கரித்தார்.

1983ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4ஆம் நாள் 'வோசிங்ரன் போஸ்ட்' பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் தீர்க்க தரிசனமான கருத்தொன்றை கீழ்வரும் பொருட்பட எழுதியது. 'சேர்ந்துவாழ்வது இவ்வளவு கடினமென்றால் ஏன் பிரிந்துவாழ முடியாது. தமிழ் மக்களுக்கு தனியாட்சி கொடுத்தால் என்ன? ஐக்கிய நாடுகள் சபையிலுள்ள பல நாடுகள் போல் தமிழ் மக்களும் தாங்கள் ஒரு தனித்துவமான தேசம் என்பதற்குரிய சரியான சான்றுகளை வைத்திருக்கிறார்கள். இந்த ஒருங்கிணைந்த இலங் கைத்தீவில் சிங்களவர்கள் மட்டுமே அதிகாரங்களை வைத்திருக்கின்றார்கள்.இந்த அதிகாரங்களைக் கொண்டுள்ள சிங்களவர் களுக்கு தமிழர்கள் இந்த ஒருங்கிணைந்த இலங்கையில் வாழ முடியாத அளவில் நடத்தப் பட்டிருக்கின்றார்கள் என்ற அறிவாவது உள்ளதா?' என்று 'வோசிங் ரன் போஸ்ட்' பத்திரிகை 1983ஆம் ஆண்டிலேயே எழுதியிருந்தது.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24ஆம் திகதி இரவிலிருந்து தொடர்ந்து இலங்கைத் தீவே எரிந்துகொண்டிருந்தபோதும் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா மௌனமாகவே இருந்தார்.

ஐந்து கோரமான நாட்களுக்குப் பின்னர் தான்-அதாவது ஜூலை 28ஆம் திகதி வியாழக்கிழமை இரவு தான் ஜனாதிபதி ஜெயவர்த்தனா முதன் முதலாக இனக்கலவரம் குறித்து நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் உரையாற்றினார். அப்போது கூட தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்டு வருகின்ற இந்த இனப் படுகொலைகள் குறித்து அவர் வருத்தம் தெரிவித்தோ, கவலை தெரிவித்தோ, அனுதாபம் தெரிவித்தோ ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

மாறாக இந்தக் கோரமான இனப்படுகொலை களை நியாயப்படுத் தும் விதத்திலேயே அவரது உரை அமைந்திருந்தது.

'1956ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்கள் மீது சிங்கள மக்கள் கொண்ட நம்பிக்கையின்மை வளர்ந்து வந்ததன் வெளிப்பாடே இந்த இனக் கலவரங்கள்' என்றும் , 'இவ்வாறான மனக்குறைகள் சிங் கள மக்களுக்கு இருக் கும் பட்சத்தில் அவர் கள் வன்முறையில் ஈடுபடுவது எளிதான செயலாகும்' என்றும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அன்று தெரிவித்தார்.

அத்தோடு மட்டும் அவர் நிறுத்திக் கொள்ளவில்லை. அவர் மேலும் இவ் வாறு கூறினார். 'சிங்கள மக்களை அமைதிப் படுத்துவதற்காகவும், அவர்களுடைய இயல்பான வேட்கையைப் பூர்த்தி செய்வதற்காகவும் ஒரு புதிய சட்டத்தை நான் அமுலாக்க இருக்கிறேன். இப்புதிய சட்டத்தின் பிரகாரம் நாட்டுப் பிரிவினை கோரும் எவரும் இந்தப் பாராளுமன்றத்தில் அங்கத்தவர்கள் ஆக முடியாது. அதுமட்டுமல்ல, நாட்டுப் பிரி வினை கோரும் எந்வொரு கட்சியும் தடை செய்யப்படும். இனிமேல் நாட்டைப் பிரிப்பது குறித்து எவரும் சட்டரீதியாகச் செயற் படமுடியாது.

இருபத்திநான்கு ஆண்டுகளுக்கு முன்பு சிங்கள -பௌத்த பேரினவாதிகளின் வன்முறைச் செயல்களால் தமிழ் இனம் எரிந்து கொண்டிருந்த நிலையில் சிங்கள ஜனாதிபதி கூறிய வார்த்தைகள் தாம் இவை.இது குறித்து Tamil Nation இணையத்தளம் பின்வருமாறு குறிப்பிட்டது.

இலங்கை ஜனாதிபதி தமிழர்களின் நிலை குறித்து கவலை தெரிவிக்கவில்லை. ஏனென்றால் தமிழர்கள் குறித்து அவர் கவலைப்படவில்லை. ஜனாதிபதி தமிழர்களுக்கு நேர்ந்ததையிட்டு அனுதாபம் தெரிவிக்கவில்லை. ஏனென்றால் ஜனாதிபதி தமிழர்கள் மீது அனுதாபம் கொண்டிருக்கவில்லை. ஜனாதிபதி தமிழர்களுக்கு நேர்ந்த கதி குறித்து பேரதிர்ச்சி தெரிவிக்கவில்லை. ஏனென்றால், அன்று தமிழர்களுக்கு ஏற்பட்ட கதி ஜனாதிபதிக்கு பேரதிர்ச்சி தரக் கூடியதாக இருக்கவில்லை'

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயர்வர்த்தனா தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட நிலை குறித்து அதிர்ச்சியோ, அனுதாபமோ, வருத்தமோ தெரிவிக்கவில்லை என்பதைக் குறிப்பிட்டு International Commission of Jurist டிசம்பர் 83 இல் ஓர் அறிக்கையில் தெரிவித்திருந்தது.

1983ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி வெளிவந்த 'ECONOMIST' சஞ்சிகையும் இதே கருத்தைத்தான் பிரதிபலித்தது. உலகளாவிய வகையில் இலங்கை அரசிற்கு எதிராக கண்டனங்கள் எழுந்தன. சிங்கள- பௌத்த மேலாண்மையை மட்டும் உறுதி செய்கின்ற இலங்கையின் அரசியல் யாப்பு குறித்து கடுமையான விமர்சனங்கள் வைக்கப்பட்டன.

ஜூலை 83 இனக்கலவரத்தின் கோரமும் , அழிவும் முழுமையாக ஆவணப்படுத்தப்பட்டு மக்கள் முன் வைக்கப்படவில்லை. இதைப்பற்றி சிந்திக்கும் போது முன்பு உலக நாடுகளால் 'பயங்கரவாதி' என்று அழைக்கப்பட்டு பின்னாளில் உலகத் தலைவர்களில் ஒருவராக மதிக்கப்பட்ட நெல்சன் மண்டேலாவின் கூற்று ஒன்று எமது ஞாபகத்திற்கு வருகிறது.

நெல்சன் மண்டேலா கூறியது இதுதான்! 'மன்னிக்கவும், மறக்கவும் வேண்டுமானால் என்ன நடந்ததென்ற முழுஉண்மையும் எமக்குத் தெரியவேண்டும்' இதுவரை நாம் தர்க்கித்த கருத்துக்கள் ஊடாக, 1983ஜூலை தமிழின அழிப்பு கொண்டுவந்த எதிர்விளைவுகளைச் சுட்டிக்காட்ட விளைகின்றோம். சிங்கள -பௌத்த பேரினவாதம் எதிர்பார்த்திராத விளைவாக தமிழர்கள் உலக நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தார்கள்.

இந்தியா வெளிப்படையாக, இலங்கைப் பிரச்சினையில் தலையிட நேர்ந்தது. சர்வதேசமயப்படுத்தப்பட்டிராத, தமிழீழ விடுதலைப் போராட்டம் பின்னாளில் சர்வதேச மயப்படுத்தப்பட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டம், புதிய பரிமாணத்தின் ஊடாக கூர்மை அடைந்தது. இவை ஜூலை 83 கொண்டுவந்த எதிர்விளைவுகளாகும்.

தமிழ் மக்களை நசுக்கி அழித்து விடுவதற்கு எண்ணியிருந்த சிங்கள -பௌத்த பேரினவாதம், இத்தகைய எதிர்விளைவுகளை எதிர்பார்க்கவில்லை. ஆனாலும், இன்றும் இருபத்தி நான்கு ஆண்டுகளுக்குப் பின்னரும், சிங்கள - பௌத்த பேரினவாதம் 1983 போன்ற சம்பவங்களை நோக்கித்தான் நகர்ந்துகொண்டு போகின்றது. அன்றைய சூழலைத் தாம் கையாண்டது போல் இன்றைய சூழலையும் தாம் கையாளலாம் என்று சிங்கள -பௌத்த பேரினவாதம் சிந்திக்கின்றது. அன்றைய சூழல் போல் இன்றைய சூழல் இல்லை என்பதும் , அன்றைய சூழலைக் கையாண்டது போல் இன்று கையாளமுடியாது என்றும், மஹிந்த ராஜபக்ஷவிற்கு இன்னும் புரியவில்லை. அன்று சர்வதேசத்திற்கு இலங்கையில் என்ன நடக்கின்றது என்ற விபரம் சரியாகத் தெரிந்திருக்கவில்லை. இன்று சர்வதேசத்திற்கு நன்கு தெரியும். அன்று இந்தியா தடுமாறியதைப் போன்று, இன்று சர்வதேசமும் தடுமாறிக் கொண்டு நிற்கின்றதே தவிர , சிங்கள தேசத்தின் உண்மை நிலையைச் சர்வதேசம் புரிந்து கொண்டுதான் உள்ளது.சர்வதேசம் தன்னுடைய முடிவு நிலையில் குழப்பமாக இருக்கிறதே தவிர, நிலவரத்தை சரியாக அறிந்து வைத்துத்தான் உள்ளது.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக தன்னால் அழைத்துவரப்பட்ட அனைத்துலக வல்லுநர்கள் குழுவோடும் இலங்கை அரசு முரண்பட்டு நிற்கின்றது.

அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட விசாரணை ஆணையத்தின் செயலற்ற தன்மையைச் சுட்டிக் காட்டி குற்றம்சாட்டிய, அனைத்துலக வல்லுநர்கள் குழுவின் தலைவர் பி.என். பகவதியோடும், அரசு பிரச்சினைப்பட்டு நிற்கின்றது. தங்களால் அழைத்துவரப்பட்டவர்களோடும் முரண்படுகின்ற அரசு, தமிழர்களின் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கும்?

இன்று ஜனாதிபதியாக விளங்குகின்ற மஹிந்த ராஜபக்ஷவின் 'சிந்தனைகளும்' அவருடைய முன்னோடிகளின் சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனைகளையே பிரதிபலிக்கின்றன.

தற்போதைய காலச் சூழ்நிலை மாற்றத்தையும் விளங்கிக்கொள்ளாமல் தமிழீழ விடுதலைப் புலிகளையும் புரிந்துகொள்ளாமல், பழைய நிலைக்கே போவதற்கு மஹிந்த ராஜபக்ஷ முயற்சிக்கின்றார். 1983 இல் ஏற்பட்ட எதிர்விளைவுகள் போல், 2007 இலும் எதிர்விளைவுகள் ஏற்படும். தமிழீழ விடுதலைப் போராட்டம் மேலும் புதிய பரிமாணத்தை அடையும் .

# இன்று ஒரு தகவல்

## பேசும் கருவி

ஆயிரத்து எண்ணூற்று எழுபத்தேழாம் வருஷம். அந்த ஆண்டின் பிற்பகுதியிலே ஒரு நாள்! முதல் தடவையாக இந்த உலகத்திலே ஒரு கருவி பேச ஆரம்பித்தது.

ஒரு விஞ்ஞானி அந்தக் கருவியைக் கண்டு பிடித்தான். அந்தக் கருவியின் கைப்பிடியைப் பிடித்து இலேசாகத் திருகினார்.

மேரி கட் ஏ லிற்றில் லாம்ப் (Mary had a little Lamp) என்னும் குழந்தைகள் பாடலை இலேசாகப் பாடி முடித்தார். கொஞ்ச நேரத்திலே அந்தப் பாட்டு மறுபடியும் ஒலித்தது.

கண்டுபிடித்தவருக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி!

உற்சாகம்! உலகத்தின் முதல் பேசும் கருவி உருவாகி விட்டது! அந்த விஞ்ஞானி 1877 ஜுலை 18ஆம் திகதி தன்னுடைய டையரியிலே இப்படி எழுதினாராம்.

இன்றைக்கு வடிவமைத்த கருவியை முன்னோடியாகக் கொண்டு, மனிதன் சத்தத்தை தேவைப்பட்ட போதெல்லாம் திரும்ப ஒலிக்கும் படி இதே கருவியை மேம்படுத்துவேன்!"

அவர்தான் தாமஸ் ஆல்வா எடிசன். ஆரம்பத்திலே அவர் வடிவமைத்த கருவி எப்படித்தெரியுமா? அதனுடைய இடது பக்கக் கைப்பிடியைத் திருகியபடி... நடுவிலே உள்ள கறுப்புத் தகட்டுக்கு அருகே காதை வைத் துக் கேட்டால் சத்தம் கேட்கும்.

அதன் பின் பிற்காலத்திலே அத்துடன் ஒரு ஹோனை இணைத்துச் சத்தத்தை அதிகமாக்கினார். எடிசனுக்குக் கொஞ்சம் காது மந்தம். அவர் தான் கண்டு பிடித்த கருவி இசைகேட்பதற்கு உபயோகப்படுமென்று கொஞ்சம் கூட நினைத்துப் பார்க்கவில்லை!

பார்வையில்லாதவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு இது பயன்படுமென்றுதான் நினைத்தார்.

எடிசன் இதைக் கண்டு பிடித்தது 1877இல் ! அதன் பின் 15 வருஷங்கள் கழித்து, அதாவது 1893இல் எமைல் பெர்லினா என்பவர் எடிசனின் பேசும் கருவியிலே சில மாற்றங்களைக் கொண்டுவந்தார்.

மெழுகு தடவப்பட்ட ஒரு தட்டை உருவாக்கி அதில் ஒலியைப் பதிவு செய்தார். அதிலிருந்து பல பிரதிகள் எடுக்கிற வழியையும் கண்டு பிடித்தார்.

அன்று தான் ஒரே குரலை பல றிக்கார்டுகளில் பதிவு செய்கிற முறை உருவானது!

அதற்கு அடுத்த வருஷம் 1894இல் தொலைபேசியைக் கண்டு பிடித்த அலெக்சாண்டர் கிரஹாம்பெல் கிராமபோன் கருவியிலே இன்னும் சில மாற்றங்களைச் செய்தார்.

இவர் உருவாக்கிய கிராமபோன் கருவியிலே வலது புறம் ஒரு கைப்பிடி இருக்கும். அதைச் சுழற்றினால் சத்தம் ஏற்கனவே இருப்பதைவிட அதிகமாகக் கேட்கும். சத்தத்தைக் கேட்கக் காதிலே ஒரு சிறிய குழாயைப் பொருத்திக் கொள்ளவேண்டும்.

1911 லே இந்தக் கிராமபோன் ஒரு நல்ல வடிவத்துக்கு வந்து சேர்ந்தது. ஓரளவுக்கு ஒழுங்குபடுத்தப்பட்ட முதல் கருவி இதுதான்.

கைப்பிடியைச் சுழற்றினால் றிக்காட்டு மேடைசுழலும். ஊசி பொருத்தப்பட்ட பகுதியை றிக்காட்டுலே வைத்தால் பெட்டியின் அடிப்பக்கத்திலேயுள்ள ஸ்பீக்கரில் இருந்து சத்தம் கேட்கும்.

அடிக்கடி ஊசியை மாற்ற வேண்டியிருந்தது தான் இதிலே உள்ள சிரமம். 1978இல் எலக்ட்ரானிக் றிக்காா்ட் பிளேயர்கள் வர ஆரம்பித்தது.

1989இல் ஒரு பெரிய மாற்றம். பழைய இசைத்தட்டுகள் மறைந்தன. சின்னஞ்சிறிய டிஸ்குகளிலே பாடல்கள் பதிவு...

நுட்பமாகக் கேட்பதற்கான சாதனங்கள் ... இப்படி ஏகப்பட்ட வளர்ச்சி....

தாமஸ்ஆல்வா எடிசன் ஒரு சமயம் மரங்களை ஆராய்ச்சி செய்து றப்பர் கண்டுபிடிக்கும் பெரிய ஒப்பந்தம் ஒன்றிலே கையெழுத்துப் போட்டிருந்தாராம்.

ஒரு மாதத்துக்கு 200டாலர் என்கிற ஒப்பந்தம். பத்து மாதம் கழித்து எடிசன், தன்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட நிறுவனத்துக்கு ஒரு கடிதம் எழுதினார்.

"இதுவரை நான் 500 மரங்களை ஆராய்ந்திருக்கிறேன். பத்து மாதங்களுக்குரிய தொகையை அனுப்பி வைக்கவும்" என்று எழுதினார்.

"றப்பரைக் கண்டு பிடிக்காமல் எப்படிப்பணம் தருவது? எதையும் கண்டு பிடிக்காததற்காகப் பணம் தர முடியாது" என்று பதில் வந்ததாம்.

"500 மரங்களிலே றப்பர் இல்லையென்று கண்டுபிடித்தேனே, அதனாலே பணம் அனுப்பித்தான் ஆக வேண்டும்" என்று எடிசன் திருப்பி எழுதினாராம். கடைசியில் அந்த நிறுவனம் வேறு வழியில்லாமல் பணத்தை அனுப்பி வைத்ததாம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# யார் வேண்டுமானாலும் வெற்றியடையலாம்

தெருவிளக்கில் படித்த ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியானார். இளம்பிள்ளைவாதத்தினால் நடக்கும் சக்தியை இழந்த பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் அமெரிக்க ஜனாதிபதியானார். கிராமத்தில் பிறந்து கஷ்ரப்பட்டு படித்து அப்துல்கலாம் அணு விஞ்ஞானியானார்.

பல்கலைக்கழகம் செல்லாத பில்கேட்ஸ் உலக செல்வந்தர் வரிசையில் இடம் பிடித்தார். சுருங்கச் சொன்னால் யார் வேண்டுமானாலும் வெற்றியடையலாம்.

வெற்றி என்பது ஒரு தங்க மாளிகை. அம்மாளிகையின் கதவுகளுக்குப் பல தங்கச் சாவிகள் உண்டு. தங்கச் சாவிகளை நாம் சரியாகப் பயன்படுத்தும் போது அக்கதவுகள் தானாகவே திறந்து வெற்றிகளை அள்ளித்தரும். இத் தங்கச் சாவிகளைப் பயன்படுத்துவதற்கு பல்கலைக்கழகப் படிப்போ அசாதாரண திறமையோ குறிப்பிடத்தக்க ஆற்றலோ தனிப்பட்ட செல்வாக்கோ தேவையில்லை.

வெற்றிகளை அள்ளித்தருவதற்கு பல சாவிகள் இருக்கின்றன. அதில் முக்கியமான ஐந்து சாவிகள் வசிய முறை, நண்பர்களின் செல்வாக்கு, மனப்பூர்வமான சேவை, எல்லையற்ற சுறுசுறுப்பு, மனோ திடச் சாவி.

### 1. வசிய முறைச்சாவி

இம்முறை பிரபல சினிமா நட்சத்திரங்கள், தொலைக்காட்சி புகழ் நடிகர்கள் பயன்படுத்துகிறார்கள். இம்முறை மிகவும் எளிமையானது. மூன்று காரியங்களைச் செய்வதே இதன் அடிப்படை. அவை யாவன,

1) காந்தம் போன்ற உள்ளொளியை எம்முள் வளர்த்துக்கொள்ளல்.
2) கவர்ச்சியான புற ஒளியை பரப்புதல்
3) கண்களால் பேசுவது, சிரிப்பது

இம்மூன்று காரியங்களையும் சரியான நேரத்தில் சரியான மனிதர்களிடம் உங்களால் செய்ய முடிந்தால் வெற்றி மாளிகையின் கதவுகளில் ஒன்றைத் திறக்க சாவி உங்களை வந்தடையும்.

### 2. நண்பர்களின் செல்வாக்குமூலம் வெற்றிக்கான சாவி

இதுமிகவும் இனிமையானது. சரியாகப் பயன்படுத்தினால் நல்ல பலன் தரக்கூடியது. உங்களுடைய முன்னேற்றத்துக்கு உதவக் கூடிய நண்பர்களை தேடிக் கொள்வது.

### 3. வலுவான உரமிக்க சேவைமூலம் வெற்றிக்கான சாவி

சாவிகளுள் மிக அர்த்தமுள்ளது. இம் முறை வாடிக்கையாளர்களுக்கோ நண்பர்களுக்கோ எமது மனமுவந்த வலுவான சேவை, யாருடைய உதவி எமக்குத்தேவையோ அவர்களுக்கு உடனே பிரதி பலனை எதிர்பார்க்காமல் சேவை செய்வது. அதனால் உங்களுக்கு கிடைக்கும் நேரடியான பலன் எவ்வளவுக்கெவ்வளவு குறை வாக இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு நீங்கள் கவர விரும்பும் மனிதர் உங்களைப்பற்றி நல்லபடியாக நினைப்பார்.

அதனால் சந்தர்பமறிந்து சரியான நேரத்தில் உங்க ளுக்கு பதிலுதவி செய்வதை தன் கடமையாகக் கருதுவார். மற்றவர் செய்யாத எந்த அதிகப்படியான சேவையை நீங்கள் செய்யத் தயாராக இருக்கிறீர்களோ அந்த அதிகப்படியான சேவை தான் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்து மக்கள் கூட்டத்தில் உங்களை பிரித்துக் காட்டி நீங்கள் விரும்பும் வெற்றியை உங்களுக்குப் பெற்றுத் தரும்.

### 4. (மனித டைனமோ முறை) எல்லையற்ற சுறுசுறுப்பு மூலம் வெற்றிக்கான சாவி.

மிகப்பெரிய வெற்றியாளர்களின் முக்கிய அடையாளமே கட்டுக்கடங்காத சுறுசுறுப்பு. உங்கள் எல்லையற்ற செயலாற்றல் மூலம் தடைகளை வென்று வெற்றிக்கனியை தட்டிக் கொள்ள வேண்டும். நாளைக்கு நாளைக்கு என்று எக்காரியத்தையும் பிற்போடாமல் இன்றே உடனடியாகக் காலதாமதமில்லாமல் காரியங்களைச் செயல்படுத்தவேண்டும்.

உலகம் உங்களிடம் கடன்பட்டிருப்பதாக நீங்கள் நினைக்காதீர்கள். நீங்கள்தான் உலகத்தை வாழவைப்பது என்று நினைக்காதீர்கள். அது உங்களிடம் கடன்பட்டிருக்கவில்லை. நீங்கள்தான் உலகத்திடம் கடன்பட்டிருக்கிறீர்கள். எமக்கு முன்பே உலகம் பிறந்துவிட்டது. எமது நொண்டிச்சாட்டுகளும் சோம்பலும் எம்மை தோல்விக்கே இட்டுச்செல்லும். எப்போதுமே சுறுசுறுப்பாகச் செயல்பட்டு காரியத்தில் இறங்கி வெற்றிக்கான சாவியைப் பெற்று வெற்றிக் கதவுகளை திறவுங்கள்.

### 5. மனோதிடத்தைப் பயன்படுத்துவதன் மூலம் வெற்றிக்கான சாவி

இது வெற்றிக்கான சாவிகளில் மிக முக்கியமானது. இம் முறையானது இடைவிடாத தன்னம்பிக்கைச் சிந்தனைகளின் எல்லையற்ற சக்தியைப் பயன்படுத்தி திட்டமிட்டு சில குறிப்பிட்ட வழிகளைக் கையாண்டால் அதிசயிக்கத்தக்க வெற்றி கிடைக்கும்.

ஒரு குறிப்பிட்ட காரியத்தில் நாம் வெற்றிபெற வேண்டும் என்ற விருப்பம் உங்களுக்கு இருக்குமாயின் அக்காரியத்தைப்பற்றி ஒரு முகப்பட்டு நினைக்க, அவ்விருப்பம் தீவிரமடைந்து ஆழ்மனத்தில் பதிந்து உங்களிடம் வெற்றிக்கான எண்ணங்களையும் செயல்களையும் உருவாக்கி வெற்றி வாய்ப்புக்கு இட்டுச் செல்லும். உங்கள் விருப்பங்கள் வெற்றி பெறும்.

இத்தங்கச்சாவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் யார் வேண்டுமானாலும் வெற்றியடையலாம். வெற்றிக்கான வாய்ப்புகள் எமது ஆளுமையில் பெரும் பங்கினை வகிக்கிறது. எமது ஆளுமையை விருத்தி செய்வதற்கான பயற்சிப்பட்டறை ஒன்று யாழ்நகரில் நடைபெற இருக்கிறது. மேலதிக விப ரங்களுக்கு 'EUREKAA' தொ.பே.இல. 0773164399 தொடர்பினை ஏற்படுத்தி அறிந்து கொள்ளலாம்.

# இராசி பலன்

05.07.2007
(ஆனி 21. வியாழக்கிழமை)
பஞ்சமி பிற்பகல் 03.19 மணிவரை
சதயம் பிற்பகல் 05.20 மணிவரை
இராகுகாலம் 01.27–02.57 மணிவரை
சுபநேரம் 07.27–08.57 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தனதானிய சேர்க்கை, தொழில் நன்மை, பெருமையடைதல், காரிய அனுகூலம். |
| இடபம் | நன்கொடை, எடுத்த காரியம் கைகூடும், சுபநிகழ்வு, உற்சாகம். |
| மிதுனம் | சரீரப் பிரயாசை, ஆரோக்கியக் குறைவு, கட்டுப்பாடு, வீண்பயம். |
| கடகம் | முழங்கால் வலி, பொருள் விரயம், முயற்சி தாமதம், கலகம். |
| சிங்கம் | சயனசுகம், பிரயாணநன்மை, அபூர்வ சந்திப்பு, காரிய அனுகூலம். |
| கன்னி | நோய் குணமடைதல், தடைப்பட்ட காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி, தனவருவாய். |
| துலாம் | முயற்சி தாமதம், புத்திரரால் கவலை, வியாதி, புதிய கருமம். |
| விருச்சிகம் | கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, தனவிரயம், ரோகநிலை. |
| தனுசு | இனிய அனுபவம், சகோதரர்வழி நன்மை, மனோதைரியம், காரிய சித்தி. |
| மகரம் | மனோ சங்கடம், வீண் செலவு, திடீர் நன்மை, ரோகநிலை. |
| கும்பம் | தெய்வசிந்தை, தேகநலன், புதிய பொருள் சேர்க்கை, நல்ல முயற்சி. |
| மீனம் | சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், பிரயாணக் கஷ்டம், முயற்சி தாமதம். |

- வளவன்

## சிசு உதான அலகு திறத்தல்

(பருத்தித்துறை)

மக்கள் வங்கியின் சிசு உதான திட்டத்தின் கீழ் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களின் நன்மைகருதி நாளை வெள்ளிக்கிழமை வித்தியாலயத்தில் சிசு உதான அலகு திறந்து வைக்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் எஸ்.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.சிவனேசன் சிசு உதான அலகை ஆரம்பித்துவைப்பார். (அ-52)

## வருடாந்த விளையாட்டுப் போட்டி - 2007

எதிர்வரும் 7ஆம், 8ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற இருந்த பிரதேசங்களுக்கிடையிலான மாவட்டமட்ட விளையாட்டுப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும், போட்டி நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்துள்ளார். (அ)

## விண்ணப்பம் கோரல்

தேசிய சுவடிகள் திணைக்களம், கட்டடப் பராமரிப்பு உத்தியோகத்தர் பதவிக்கான (இலங்கை தொழில்நுட்பசேவை – பிரிவு IIஆ) விண்ணப்பங்களை கோரியுள்ளது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2007.07.27 ஆகும். மேலதிக விபரங்களை 2007.07.06 வர்த்தமானியிலோ அன்றி வலம்புரிக் காரியாலயத்தில் நேரில் வந்தோ பார்வையிடலாம். (அ)

## வினைத்திறன் காண் பரீட்சை - 2007

சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அதிகாரிகளுக்கான முதலாவது வினைத்திறன் காண் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால், ஒக்டோபர் மாதம் 2007இல் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 20.07.2007 என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களை 06.07.2007 வர்த்தமானியிலோ அன்றி வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிடலாம். (அ)

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே
செல்வத்தை தேய்க்கும்படை.

—திருக்குறள்

# வலம்புரி

## காணாமல் போனோரின் உறவுகள் விடும் கண்ணீர்

பி.பி.ஸி.தமிழோசை நிகழ்ச்சியில் இலங்கைக்கு கணிசமான இடம் ஒதுக்கப்படுகிறது. இலங்கையில் வியாபகம் எடுத்துள்ள போர் மற்றும் மனித உரிமை மீறல்கள் பற்றிய தகவல்களின் நிமிர்த்தம் இலங்கைக் கண்ணோட்டம் பி.பி.ஸி.தமிழோசையின் செய்தி நேரத்தில் கூடிய இடத்தை பிடித்து விடுகிறது.

செய்தியின் இறுதிப் பகுதியில் காணாமல் போனவர்களின் உறவுகளுடனான செவ்விகள் நெஞ்சை உருக்கக்கூடியன.

தம் பிள்ளைகளை தேடும் தாய்மார் விடும் கண்ணீர்-கதறல் மனித வாழ்வை வெறுக்க வைக்கக் கூடியது மட்டுமல்ல, இவற்றுக்கெல்லாம் ஓர் முடிபு கிடையாதா? என்ற ஏக்கத்தையும் தரவல்லது.

காணாமல் போன தமது பிள்ளைகள் வீடு திரும்புவார்கள் என்ற நம்பிக்கை ஒருபுறம்; காணாமல் போனவர்கள் எங்கே இருக்கிறார்கள்,அவர்களை தடுத்துவைத்திருப்பது யார் என்பது தெரியவில்லையென அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் குழுக்கள் தெரிவிக்கும் தகவல்கள் மறுபுறம்.

அப்படியானால் காணாமல் போனவர்கள்-கடத்தப்பட்டவர்கள் இருக்கிறார்களா? இல்லையா? என்பது புரியாத புதிராகவே உள்ளது.

நாடு என்பது நிம்மதியையும் ஆறுதலையும் தருவதாயும் நடுநிலையாளர் கூட்டத்தைக் கொண்டதாகவும் இருக்கவேண்டும்.

இதைவிடுத்து கண்ணீரும் கம்பலையுமாக ஆற்றலையும் வாழ்க்கையைக் கொண்ட நாடு நாடல்ல. அது கொடிய மிருகங்கள் வாழும் அடவியிலும் மோசமானதாகும்.

எல்லா மக்களும் நிம்மதியாக வாழவேண்டுமென எண்ணுகின்ற பரந்த மனப்பாங்கு ஆளும் வர்க்கத்திடம் இருக்கவேண்டும். அப்போதுதான் காணாமல் போன தம் பிள்ளைகளைத் தேடி கண்ணீர் வடிக்கும் தாய்மாரின் துன்பத்தை உணர முடியும்.

இலங்கை திருநாடு எதிர்காலத்திலேனும் சுபீட்சத்தை அடையவேண்டுமாயின் முதலில் கண்ணீர் வடிக்கும் அவலம் நீங்க வேண்டும்.

கொலை,கொள்ளை,ஆட்கடத்தல்,அதனூடான கண்ணீர் என்பன நாட்டை நாசமாகக் கூடியது. உலகில் ஒரு பகுதி மக்கள் கண்ணீர் விடுகின்ற போது மற்றைய பகுதி மக்கள் நிம்மதியாக வாழ்ந்து விட முடியாது.இது வரலாற்று உண்மை.

நம் முன்னோர்கள் வகுத்த அறக்கருத்துக்கள் என்றும் பொய்த்தவை அல்ல. எனவே பெண்கள்-தாய்மார் விடுகின்ற கண்ணீரே உலகின் மிகப்பெரிய படைக்கலமாகும்.

அத்தகைய படைக்கலமான கண்ணீருக்கு யார் காரணமோ-யார் உடந்தையோ அவர்கள் அனைவரையும் அது வதைசெய்து விடும்.

எனவே இத்தகைய துன்ப துயரங்களில் இருந்து விடுபடுவதற்கான சூழ்நிலையை அனைவரும் செய்தாகவேண்டும்.

# குற்றவாளிகள் யாராக இருந்தாலும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்

## அமைச்சர் மகிந்த சமரசிங்க

தவறுகள் எங்கு நிகழ்ந்தாலும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்குரிய தண்டனையை பெற்றுக் கொடுப்பதில் அரசாங்கம் முறையாகச் செயற்பட்டு வருவதாக மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் நிலைவரங்கள் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் வாராந்த சந்திப்பு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அமைச்சர்களான ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே,லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது; வவுனியா தாண்டிக்குளம் விவசாயக் கல்லூரிக்கு அருகில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஐந்து இராணுவத்தினர் பலியாகினர்.

இதனையடுத்து இராணுவ உறுப்பினர் ஒருவரும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் இணைந்து மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அக் கல்லூரியைச் சேர்ந்த ஐந்து மாணவர்கள் பலியாகினர்.

இச் சம்பவம் குறித்த விசாரணைகள் உயர் நீதிமன்றத்தில் நடைபெற்றது. இவ் விசாரணைகளின் போது கடந்த 2007 ஜனவரி 2 ஆம் திகதி நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பில் இச் சம்பவத்துடன் தொடர்பான ஒருவர் அடையாளம் காணப்பட்டார். பின்னர் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவருக்குரிய தண்டனையை நீதிமன்றம் வழங்கும்.

நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த மேற்கொள்ளப்படும் எந்தவொரு முயற்சிக்கும் அரசாங்கம் இடமளிக்கமாட்டாது. அது யாராக இருப்பினும் சரியே. இச் சம்பவம் அதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். ஊடகங்கள் தவறுகளைச் சுட்டிக்காட்டி மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் சிறப்பாக செயலாற்றி வருகின்றன. இதேவேளை தவறுகளுக்கான உரிய நியாயம் கிடைக்கும்போது அது குறித்து தகவல்களை வெளியிட ஊடகங்கள் பின்நிற்கக் கூடாது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ந-5)

# அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கமுடியாத பாரிய நிதி நெருக்கடியில் மகிந்தவின் அரசு

## பொருளியல் வல்லுநர் ஹர்சா டி சில்வா

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கமுடியாத பாரிய நிதி நெருக்கடியில் அரசு சிக்கிவிட்டதாக பொருளியல் வல்லுநர் ஹர்சா டி சில்வா தெரிவித்துள்ளார். கொழும்பில் இருந்து வெளிவரும் த மோனிங் லீடர் வார ஏட்டுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் கூறியுள்ளதாவது;

மகிந்த அரசாங்கம் தற்போது நெருக்கடிக்களைச் சந்தித்து வருகிறது. நிதியைப் பொறுத்தவரை அரசாங்கத்தின் நிலை மிகவும் மோசமானது. அது நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளது.அதனால் சில பகுதிகளில் உள்ள ஊழியர்களுக்கான ஊதியங்களை வழங்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசாங்கத்தின் மீதான அனைத்துலக சமூகத்தின் அதிருப்திகளும் நாட்டின் பொருளாதாரத்தை பாதித்துள்ளது. இலங்கையில் நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்கள் உல்லாசப் பயணத்துறையை கடுமையாகப் பாதித்துள்ளது.

இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் இருந்து பணத்தை அச்சிடுவதை அரசாங்கம் குறைத்து வருகிறது. இதற்கு நாட்டில் பண வீக்கம் ஏற்படலாம் என பொருளியல் வல்லுநர்கள் கொடுத்த அழுத்தமே காரணமாகும்.

கடந்த ஜனவரியில் நாட்டின் பணவீக்கம் 20 வீதமாகும். சில மானியக்கொடுப்பனவுகளை அரசாங்கம் வழங்கி இருந்தது. குறிப்பாக எரிபொருட்களுக்குரிய மானியங்கள் எனினும் அரசாங்கம் பணத்தை அச்சிடுவதைக் குறைத்ததால் பண வீக்கம் 13 வீதமாக தற்போது குறைந்துள்ளது.

மேலதிக பணத்தை அச்சிடுவதை நிறுத்தியதன் மூலம் மத்திய வங்கி சரியான முடிபை எடுத்துள்ளது. இது ஒரு வருடத்திற்கு முன்னர் செய்திருக்கப்படவேண்டியது. எனினும் மேலும் தாமதமாக்காது தற்போது எடுத்த முடிபு வரவேற்கத்தக்கது. ஆனால் திறைசேரியின் அழுத்தங்களுக்கு எவ்வளவு காலம் அது தாக்குப்பிடிக்கும் என்பதில் இது தங்கியுள்ளது.

நிதி விடயத்தில் அரசாங்கம் தற்போது நெருக்கடியான காலகட்டத்தில் உள்ளது. அதற்கு மேலதிக பணத்தை அச்சிடுவதைக் குறைத்தது காரணமாகும். சில பிரிவுகளில் உள்ள ஊழியர்களுக்கு ஊதியங்களைக் கொடுப்பதற்கும் அரசிடம் பணம் இல்லை.

முன்னர் அதற்கான பணத்தை மத்திய வங்கி ;திறைசேரிக்கு வழங்கியிருந்தது. ஆனால் தற்போது முன்னரைப் போல் பணத்தை வழங்கும் நிலையில் மத்திய வங்கி இல்லை. நாட்டில் உள்ள பிரச்சினையை இராணுவ வழிகளில் தீர்க்கலாம் என அரசாங்கம் நம்பினால் அதற்கு பொருளாதாரத்தை பலியிடவேண்டி இருக்கும்.

இந்த நிலையில் மகிந்த சிந்தனையை நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினமானது. இந்த வருடத்தின் முதற் காலாண்டுப் பகுதியில் பொருளாதார வளர்ச்சி 6.1 வீதமாக குறைவடைந்துள்ளது. கடந்த ஆண்டு இந்த காலப் பகுதியின் எட்டு வீத வளர்ச்சிக்கு இது எதிரானது. இது 7.0 வீதம் கூட இல்லை.

இருந்தபோது மத்திய வங்கி பொருளாதார வளர்ச்சி வீதத்தை தற்போது வெளிப்படுத்த மாட்டாது. அண்மையில் அது அதை நிறுத்தியுள்ளது. அதாவது,சில விடயங்களை அது பொதுமக்களுக்குக் காண்பிப்பதை விரும்பவில்லை என்றார் அவர். (ந-5)

# மீசாலை இளைஞர் இருவர் கைது உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்

தமிழ் இளைஞர்களின் வழக்குகள் குறித்த விபரங்களை சமர்ப்பிக்குமாறு நீதி மற்றும் சட்டமறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் சுகத் கம்லத்தை மன்றில் ஆஜராகுமாறும் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்களின் அடிப்படை மனித உரிமை மீறல் மனுமீதான விசாரணையின்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மீசாலை வடக்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கிருஷாந்தன்,அல்லாரை மேற்கு மீசாலையைச் சேர்ந்த கணேசமூர்த்தி ரூபன் ஆகியோர் கைது செய்யப்பட்டு கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டமை தொடர்பான அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மேற்படி இளைஞர்கள் 27.06.2006 அன்று யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்டு கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். வெடி குண்டு வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் இருவரும் வேம்பிராய் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு மேற்படி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் காங்கேசன்துறை குற்றப்புலனாய்வுத் துறையினரால் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில் இருவரும் தற்போது கொழும்பில் விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-5)

# ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் பதவி 27 ஆம் திகதி நேர்முகப்பரீட்சை

## கப்பலில் பயணிப்பதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான தகுதிகாண் பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதி அகில இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் நடைபெறவுள்ளதாக ஆயுர்வேத திணைக்கள உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.மேற்படி பரீட்சைக்குச் செல்லவுள்ள பரீட்சார்த்திகள் தமக்குரிய பயண அனுமதியினை தமது பிரதேச சிவில் நிர்வாக காரியாலயத்தில் பெற்று எதிர்வரும் 23 ஆம் திகதி கப்பல் மூலம் தமது பயணத்தினை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி அறிவித்துள்ளார்.

எனவே பரீட்சார்த்திகள் தமது பயண அனுமதிச் சீட்டுடன் எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 10 மணிக்கு மாவட்ட செயலக புனர்வாழ்வுக்கிளைக்குச் சமுகமளித்து தமது பயணத்தை உறுதிப்படுத்துமாறு அவர் கேட்டுள்ளார். பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பரீட்சார்த்திகளின் விபரம் வருமாறு;

எஸ்.அமிழ்தினி,ஏ.ஏ.அனஸ்ரின், என்.பரீனா, எம்.சி.எம்.கலீட்,வி.கிரிதரன்,எஸ்.கிருத்திகா,எம்.எஸ்.எம்.லாபீர், எம்.எம்.மாலிகா,எம்.ஐ.எஸ்.ஜே.மான்சில், என்.ரி.மூர்த்தி, என்.நளினி,பி.ஐ.நிகாரா,எம்.எஸ்.நூரல்முசீனா, ஆர்.பிரதீப்குமார், ஏச்.எஸ்.ஐ.சாகீப், ரி.சர்வானந்தன்,

எஸ்.சர்வானந்தன், எஸ்.சாந்தினி, எஸ்.சிவலக்ஷ்மி, எம்.சிவகீதா,கே.சிவதரன், வி.சிவகுமார்,ஜே.சுகுமாரன்,எஸ்.சுதாமணி,ஏ.தவசுதன்,ரி.திலீபன், வி.திருமால்,எஸ்.வர்ணகுலேந்திரன், எஸ்.கிருஜா, பி.சுரேஷ்குமார், எம்.கணேசலிங்கம்,எஸ்.சரோஜா,எஸ்.சிவசுப்பிரமணியம், எஸ்.கணேசன், ஏ.சிவசுப்பிரமணியம்,கே.செல்வநாதன், கே.நடேசராசன், எஸ்.மேகலாத்,ரி.கமலாவதி, ஆர்.பூபதீஸ்வரி. (ந-5)

# நாட்டை விட்டு வெளியேறினார் கோத்தபாய ராஜபக்ஷ

## கொழும்பு ஆங்கில ஊடகம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரும பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ இலங்கையிலிருந்து வெளியேறி விட்டதாக கொழும்பு ஆங்கிலவார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அனைத்துலகச் சமூகத்தினால் அழுத்தங்கள் ஏற்படலாம் என்ற கருத்தைத் தொடர்ந்து பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கடந்த சனிக்கிழமை திட்டமிடாத பயணமாகக் குடும்பத்துடன் நாட்டை விட்டு வெளியேறினார்.

தன்னைப் படுகொலை செய்ய கோத்தபாய ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளதாக முன்னாள் அமைச்சரான சிறிபதி சூரியாராட்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த 48 மணி நேரத்தில் கோத்தபாய நாட்டை விட்டுவெளியேறியது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள மோசமான நிலை குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச்சபை கடந்த மாதம் கலந்துரையாடியதுடன் அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணைகள் அவசியம் என பிரான்ஸும் அழைப்பு விடுத்திருந்தது.

அமெரிக்காவின் 50 காங்கிரஸ் உறுப்பினர்கள் குழு இலங்கையில் நடைபெற்று வரும் மோசமான நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அமெரிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அங்கு நடைபெறும் நீதிக்குப் புறம்பான படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றை இருதரப்பும் நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தனர். (ந-5)

## இனப்பிரச்சினையின் தோற்றத்...

தீர்வு காண முடியாது.

இனப்பிரச்சினையைத் தொடங்கி வைத்தது பிரபாகரன்தான் என்று நிறையப் பேர் கருதினாலும் அவர் காரணமானவர் அல்ல. அரசியல் வழித் தீர்வுக்கு முட்டுக்கட்டையாக இரு புதிய காரணிகள் உருவாக்கியுள்ளன.

தற்போதைய நிலைமையானது மிகவும் மோசமானது. நாட்டினது அரசியலில் பேரினவாதம் ஆதிக்கம் செலுத்தத்தொடங்குகிறது. கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களை நாம் இழந்திருக்கின்றோம். தற்போதும் அத்தகைய சந்தர்ப்பத்தை இழந்தோமேயானால் பயங்கரவாதத்துடன் இணைந்தே நாம் எப்போதும் செல்ல வேண்டியதாகவிருக்கும். இனப்பிரச்சினையைப் பேரினவாதக் கண்ணோட்டத்துடன் அணுகாமல் பரந்துபட்ட வகையிலே அணுகி இடதுசாரி இயக்கத்திற்கு ஜே.வி.பியினர் திரும்ப வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளைத் தடை செய்ய தற்போதைய அரசாங்கம் முயற்சிப்பதை அமைச்சர்கள் எதிர்க்கின்றனர். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டு விட்டால் பிரபாகரன் மகிழ்ச்சியடைவார்.

புலம்பெயர் தமிழர்கள் மேலதிக நிதியுதவி செய்வர். கொழும்பிலிருந்து தமிழர்கள் அண்மையில் வெளியேற்றப்பட்டபோது இதேயுணர்வுகள்தான் எதிர்ஒலித்தன. விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடித்தாலும் அரசியல் ரீதியாகத் தோற்கடிக்க முடியாது என்றார் அவர். (ந-5)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்...

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை உரிய முறையில் கடைப்பிடிப்பதற்கு வேண்டிய அழுத்தங்களை அனைத்துலக சமூகம் மேற்கொள்ள வேண்டும் என்றும் அதற்கான ஏற்பாடுகளை நோர்வே தரப்பு முன்னெடுக்க வேண்டும் என்றும்அவர்கள்வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்இன்று சுவீடனுக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் அங்கு சுவீடனில் தெற்காசிய விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் கிளாஸ் மெலினை சந்தித்துப் பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து டென்மார்க் மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்யவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து அந்நாட்டு அரசாங்கத் தரப்புப் பிரதிநிதிகளுக்கு விளக்கமளிக்கவுள்ளதாகவும்தெரியவருகின்றது. (ந-5)

## குற்றப் புலனாய்வுத்...

அவரது உத்தியோகபூர்வவாகனப் பயன்பாடு குறித்து விசாரணை நடத்தியுள்ளனர்.

இது நாடாளுமன்ற உறுப்பினரின் உரிமையை மீறும்செயலாகும். இந்நடவடிக்கைக்குப் பின்னால் அரசாங்கம் இல்லை எனில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அத்தகைய உரிமையை வழங்கியது யார் என்று இந்த நாடாளுமன்றம் கவனத்தில் கொள்ள வேண்டும். எம்மை அடக்கி அமைதிப்படுத்தும் நடவடிக்கையாக இதனை நாம் பார்க்கின்றோம் என்றார். இதனை அரசாங்கத்தின் பிரதான கொடறா ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே நிராகரித்தார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அத்தகைய உத்தரவு எதனையும் அரசாங்கம் பிறப்பிக்கவில்லை என்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களை அச்சுறுத்துகின்ற தேவை அரசாங்கத்திற்கு இல்லை என்றும் கூறினார்.

இது தொடர்பாக சபாநாயகர் டபிள்யு. ஜே.எம்.லொக்குபண்டார விசாரணை நடத்த வேண்டும் என்றார். ஆனால் அதனை சபாநாயகர் நிராகரித்தார். (ந-5)

## கடத்தல்...

ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.விசாரணைகள் தொடர்ந்து நடை பெற்று வருகின்றன என்கின்றார் ஹெகலிய ரம்புக்வெல.

இலங்கையில் ஆட்கடத்தல் சம்பவங்களுக்குப் பொலிஸ் பிரதிமாஅதிபர், வான்படையின் முன்னாள் அதிகாரி ஆகியோரே காரணம் என்று நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரட்ன அம்பலப்படுத்தியதைத் தொடர்ந்து இக்கைது நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டது.

இருப்பினும் கைது செய்யப்பட்ட முதன்மைக் குற்றவாளியான வான்படை முன்னாள் அதிகாரி நிஷந்த கஜநாயக்கவை உடனே பிணையில் விடுதலை செய்ய மகிந்தவின் சகோதரர் கோத்தபாய உத்தரவிட்டிருந்தார் என்றும் கூறப்படுகின்றது. (ந-5)

## போர் ஆயுதங்களைத்...

யணனை நேற்றுச் சந்தித்துப் பேசியுள்ளதாகவும் அதன்போது தமக்கான ஆயுத உதவிகளை இந்தியா வழங்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளதாகவும் தெரிய வந்துள் ளது.

முன்னதாக அரசாங்கம் சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து ஆயுத தளபாடங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடாது என்று கே.ஆர்.நாராயணன் எச்சரிக்கும் தொனியில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் இலங்கையின் பாதுகாப்புத் தரப்பினருக்கு அவசரமாகத் தேவைப்படும் யுத்த தளபாடங்களை இந்தியா வழங்க வேண்டும் என்று றோகித போகொல்லாகம இந்தியப் பாதுகாப்பு ஆலோசகரிடம் கோரியுள்ளார்.இதேவேளை இந்திய மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தமிழகத்தைச் சேர்ந்த கட்சிகள், இந்திய அரசாங்கம் இலங்கைக்குப் போர்த் தளபாடங்கள் வழங்குவதைக் கடுமையாக எதிர்த்து வருகின்றன. கூட்டணிக் கட்சிகளின் எதிர்ப்பினை மீறி இந்தியா இலங்கைக்கு ஆயுத உதவிகளை வழங்குமா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் எனினும் ஆயுத தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான மாற்று ஏற்பாடுகள் குறித்து நாராயணன் வெளிவிவகார அமைச் சருக்கு எடுத்துரைத்தார் என்றும் தெரியவந்துள்ளது. (ந-5)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு...

களான ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த டேவிட் பிறைஜ், நுஷ் ஹோல்ற் ஆகிய இருவர் தலைமையிலான குழு சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தை நடவடிக்கையிலும் உயர்மட்ட அரசியல் தொடர்புகளிலும் ஐக்கிய அமெரிக்கா தனது நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியமாகும் என ஜோர்ஜ் புஷ்ஷுக்குக் கூறியுள்ளனர்.

அரசாங்கக் கட்டுப்பாட்டில் நடைபெறும் ஆட்கடத்தல்கள், படுகொலைகள், காணாமல் போதல் போன்ற மனித உரிமை மீறல் சம்பவங்களை முடிவுக்குக் கொண்டு வர உடனடி நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறும் சட்ட வல்லுநர்கள் அமெரிக்க ஜனாதிபதியிடம் கேட்டுள்ளனர்.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களுக்குச் சர்வதேசத்தின் 'சம்பந்தமில்லாத - ஆர்வமில்லாத' போக்கே காரணம் என சர்வதேச உதவிக் குழுவின் அறிக்கையை அவர்கள் கடிதத்தில் ஆதாரம் காட்டியுள்ளனர். (ந-5)

## புலிகளுடன் பேசும் எண்ணம்...

நோர்வே அனுசரணையாளர்களை மீண்டும் அமைதி முயற்சிகளை ஆரம்பிக்குமாறு அரசாங்கம் கோரியதாக வெளியான தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என்றும் அமைதி முயற்சிகளை மீள ஆரம்பிக்குமாறு அரசாங்கம் நோர்வேத் தரப்பிடமோ அல்லது நோர்வே அரசாங்கத்திடமோ உத்தியோகபூர்வமாகக் கோரவில்லை என்றும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமைதி முயற்சிகளை மீள ஆரம்பிக்க வேண்டிய அவசியம் தமக்குக் கிடையாது என்றும் விடுதலைப்புலிகள் தமது பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிட்டால் மட்டுமே அரசாங்கம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் நடாத்துவதற்கும் அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை மீட்பதற்கும் அரசாங்கத்திற்குப் பூரண அதிகாரம் இருப்பதாகவும் தமது படை நடவடிக்கைகளை கைவிடுமாறு எவரும் அழுத்தம் கொடுக்க முடியாது என்றும் ஹெகலிய ரம்புக்வெல கூறியுள்ளார்.

இதேவேளை மகிந்த ராஜபக்ஷவின் விசேட பிரதிநிதி ஒருவர் நோர்வேத் தரப்புடன் தொடர்பு கொண்டு அமைதி முயற்சிகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் இதனை அடுத்து அரசாங்கம் தமது பயணத்திற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை உரிய முறையில் மேற்கொள்ளும் பட்சத்தில் தாங்கள் மீளவும் அமைதி முயற்சிகளில் ஈடுபட தயாராகவிருப்பதாகவும் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்ஸன் பெளயர் அறிவித்திருந்ததாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஜோன் ஹான்ஸன் பெளயரின் கருத்துக் குறித்து ஊடகவியலாளர்கள், அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவிடம் வினாவிய போது நோர்வே அனுசரணையாளர்களுக்கான பயண ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என பதிலளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் தாங்கள் அமைதி முயற்சிகளை மீள ஆரம்பிக்குமாறு நோர்வேயிடம் அழைப்பு விடுக்கவில்லை என்று அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கூறியிருப்பது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. (ந-5)

## பெளயர்...

ஜோன் ஹான்சன் பெளயர் இலங்கைக்கு வருகை தருகின்றார் என்றும் கிளிநொச்சிக்குச் செல்கின்றார் என்றும் வெளியான செய்திகள் எப்படி உருவானவை என்று தெரியவில்லை.

நோர்வே அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்முடன் இலங்கை அரசாங்கம் தொடர்பு கொண்டு பேசியதா? என்பது குறித்துக் கருத்துத் தெரிவிக்க இயலாது என்றார் அவர். (ந-5)


### கண்ணீர் அஞ்சலி

எமது அன்புத் தம்பி இ:நந்தகோபனின் அன்புத் தந்தையார்

**துரைச்சாமி இராமமூர்த்தி**

(முத்துச்சப்பற அமைப்பாளர், இணுவில்)

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். அவரின் இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம்வல்ல இணுவில் பரராசசேகரப் பெருமானின் திருவடிகளில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*நல்லையா குடும்பம்*

*கொக்குவில்*

(இ)



### வெளிவந்துவிட்டது

இலங்கையின் முன்னனி ஆசிரியர் [redacted] அவர்களின்

தரம்: 5 வெற்றித் தேர்வு- 17 18 19

தரம்:4 வெற்றித் தேர்வு- 1 2 3

விமானி மூலம் வருவது

முன்னணி ஆசிரியர்களின் தயாரிப்பில்

தரம்:4 முதல் O/L வரை

2ந் தவணை வினாப்பத்திரம்

15/07 2007 ஞாயிறு

சகல புத்தகசாலைகளிலும் பதிவு செய்யுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:-

077 3126807, 222 9016, 226 3815

(170)



### யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வது)

### வினாவிடைப் போட்டி

2007ஆம் ஆண்டின் சர்வதேச கூட்டுறவு தினவிழாவை ஒட்டி யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையால் வினாவிடைப் போட்டி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் 'செயலாளர், யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப கட்டிடத் தொகுதி, 2ம் மாடி, இலக்கம், 12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரியில் 18/07/2007ந் திகதிக்கு முன் தொடர்பு கொண்டு வினாக்கொத்தைப் பெற்றுக் கொள்ளவும். வினாக்கொத்தினைப் பூர்த்தி செய்து 20/07/2007 க்கு முன் ஒப்படைத்தல் வேண்டும்.

- செயலாளர்

(C-206)



### தேவை

பிஸ்கட், கேக் செய்யக் கூடிய பெண் பிள்ளைகள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

சீலன் பேக் ஹவுஸ்

நவாலி தெற்கு,

நவாலி

(C-202)



### BOC மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கிக் கிளைகளில் 30.04.2006 ற்கு முன்னர் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி இடம் நேரம் |
| --- | --- |
| யாழ்.மேற்தரக் கிளை<br>யாழ்.2ம் மேற்தரக் கிளை<br>திருநெல்வேலி<br>ஊர்காவற்றுறை<br>காரைநகர்<br>மானிப்பாய்<br>சுன்னாகம்<br>(அச்சுவேலி விரிவாக்கற் கிளை உட்பட)<br>காங்கேசன்துறை<br>நெல்லியடி<br>பருத்தித்துறை<br>சாவகச்சேரி | யாழ்.மேற்தரக் கிளை யாழ்ப்பாணம் 2007 யூலை மாதம் 7ம் 8ம் திகதிகளில் காலை 9.30 மணிக்கு |

இந்த ஏல விற்பனையை நிற்போடும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

03.07.2007

உதவிப் பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி (வட பிராந்தியம்),
உதவிப் பொது முகாமையாளர்
காரியாலயம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3126
021 222 2735

(C-196)


இப் பத்திரிகை வலம்புரி என்.கோ [illegible]த்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.07.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.